WEB COPY

IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS

**DATED: 23-02-2026**

CORAM

**THE HON'BLE MR.JUSTICE V. LAKSHMINARAYANAN**

**WP No. 505 of 2026**

S.Shanmuga Sundaram

..Petitioner(s)

Vs

1. The District Collector
   Erode, Erode District -638 011.

2. The Project Director
   District Rural Development Agency,
   Collector Office Buildings,
   Erode -638011.

3. The Executive Engineer
   District Rural Development Agency,
   Erode -638011.

4. The Block Development Officer
   (Village Panchayat),
   Kodumudi -638151
   Erode District.

..Respondent(s)

**Prayer :** This petition has been filed under Article 226 of the Constitution of India for directing the 4th Respondent to disburse the balance amount of Rs.18,31,664/- (Rupees Eighteen Lakhs Thirty One Thousand Six Hundred and Sixty Four only) due to the petitioner, together with interest at the rate of 12% per annum from the date of completion of work till the date of actual payment in terms of the Memorandum issued by the 2nd Respondent in Na.Ka.No.3742/2022/A5 dated 15.11.2025.



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY


| | |
|---|---|
| For Petitioner(s): | Mr.N. Palanikumar |
| For Respondent(s): | Ms.C.Meera Arumugham<br>for Mr.M.Shajahan, SGP - R1 to R3<br>Mr.M.Muruali, GA – R4 |


https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY

**O R D E R**

I heard Mr.N.Palanikumar for the petitioner, Mr.M.Murali for the fourth respondent and Ms.C.Meera Arumugham for Mr.M.Shajahan for the first to third respondents.

2. The following instructions have been given to Mr.M.Murali by the Block Development Officer, Kodumudi Block:-



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY

| | |
|---|---|
| அனுப்புதல் | பெறுதல் |
| திருமதி.கு.கல்பனா பி.எஸ்சி., | Mr.M.Murali, |
| வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), | Government Advocate Madaras High Court, |
| கொடுமுடி வட்டாரம். | Room No.17, |
| | 2nd floor, law officer's Block, |
| | High Court Building, |
| | Chennai – 600104, |
| | Cell: 9444279278. |

ந.க.எண்:141/2026/ஆ1 நாள்: 19.02.2026.

ஐயா,

பொருள்: ஜல் ஜீவன் மிசன் திட்டம் – 2022-23 – கிராம ஊராட்சிகளில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் – அஞ்சூர் மற்றும் இச்சிப்பாளையம் ஊராட்சிகளில் வழங்கப்பட்ட குடிநீர் இணைப்புகள் – பொதுமக்கள் பங்களிப்புத்தொகை வசூல் நடவடிக்கை மேற்கொண்ட விபரம் தெரிவித்தல் – தொடர்பாக.

பார்வை:

1. மாவட்ட ஆட்சித்தலைவர்/தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் நிர்வாக அனுமதி நடவடிக்கைகள் ந.க.எண்.3742/2022/அ5, நாள்:23.06.2022.
2. மாவட்ட ஆட்சித்தலைவர்/தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் வேலை உத்தரவு நடவடிக்கைகள் ந.க.எண்.3742/2022/அ5, நாள்:06.10.2022.
3. அரசாணை (நிலை) எண்.111 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை (CGS.1) நாள்.16.06.2020.
4. சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண்.505/2026.

*****

பார்வை 1-ல் காணும் 2-ல் காணும் மாவட்ட ஆட்சித்தலைவர்/தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட குடிநீர் இணைப்பு பணிகளுக்கு வழங்கப்பட்ட வேலை உத்தரவு நடவடிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி இத்திட்டமானது மத்திய, மாநில மற்றும் பொதுமக்களின் பங்களிப்புத்தொகையுடன் செயல்படுத்தப்பட்டு வருவதால் பொதுமக்கள் பங்களிப்புத்தொகை மட்டும் முழுமையாக வசூல் செய்யப்பட்ட பிறகு இறுதியாக ஒப்பந்ததாரர்களுக்கு விடுவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் வேலை உத்தரவில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு ஒப்பந்ததாரரால் பணிகள் ஆரம்பிக்கப்பட்டது.



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY

மேலும், கிராம ஊராட்சிகளில் குடிநீர் இணைப்பு கோரி வைப்புத்தொகை செலுத்தப்பட்டவர்களுக்கு மட்டுமே குடிநீர் இணைப்பு வழங்கியிருக்க வேண்டும். ஆனால், வைப்புத்தொகை செலுத்தப்பட்ட விபரங்களை ஊராட்சி நிர்வாகத்திடம் பெறாமல் தன்னிச்சையாக முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்களின் அறிவுறுத்தலின்படி, அனைத்து வீடுகளுக்கும், ஒப்பந்ததாரர் குடிநீர் இணைப்பு வழங்கியுள்ளார். மேலும், முன்னாள் ஊராட்சி மன்றத்தலைவர்களின் நெருங்கிய உறவினர்களுக்கு 2 மற்றும் 3 இணைப்புகளும் வழங்கியுள்ளதால் அப்பொதுமக்களிடம் பங்களிப்புத்தொகை செலுத்த கோரியதில் தங்களுக்கு குடிநீர் இணைப்பு இலவசமாக வழங்கப்பட்டது எனவும் தொகை செலுத்த கட்டாயப்படுத்தினால் குடிநீர் இணைப்பு துண்டித்துக்கொள்ளுமாறு தெரிவிக்கின்றனர். இதனால் இது போன்ற வீடுகளிலிருந்து பொதுமக்கள் பங்களிப்புத்தொகை பெற இயலாத சூழ்நிலை உருவாக்கப்பட்டது.

ஊராட்சி மன்ற தலைவர்கள் பதவியில் இருந்த காலத்தில் அடுத்து வரும் தேர்தலை கருத்தில் கொண்டு பொதுமக்கள் பங்களிப்புத்தொகை வசூல் செய்திடாமலும், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் ஊராட்சி செயலர்களை வசூல் செய்ய செல்ல கூடாது எனவும் நிர்பந்தப்படுத்தி வந்தனர்.

தற்போது, தனி அலுவலர் பதவிக்காலத்தில் உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டு நாளது வரை வசூல் செய்யப்பட்ட பொதுமக்கள் பங்களிப்புத் தொகை ஒப்பந்ததாரருக்கு கீழ்கண்டவாறு விடுவிக்கப்பட்டுள்ளது.

பட்டியல் தொகை (பொதுமக்கள் பங்களிப்பு தொகை நீங்கலாக) 90% விடுவிக்கப்பட்ட விபரம்

| வ. எண் | ஊராட்சியின் பெயர் | வழங்கப்பட வேண்டிய 90% பட்டியல் தொகை | நாளது வரை வழங்கப்பட்ட 90% பட்டியல் தொகை | மீதம் வழங்கப்பட வேண்டியது |
|---|---|---|---|---|
| 1 | அஞ்சூர் | 9046952 | 9046952 | 0 |
| 2 | இச்சிப்பாளையம் | 13556585 | 13556585 | 0 |
| | மொத்தம் | 22603537 | 22603537 | 0 |

10% பொதுமக்களின் பங்களிப்புத்தொகை

| வ. எண் | ஊராட்சியின் பெயர் | வழங்கப்பட வேண்டிய 10% பொதுமக்களின் பங்களிப்புத் தொகை | 14.10.2025 அன்று வழங்கப்பட்ட 10% பொதுமக்களின் பங்களிப்புத் தொகை | மீதம் வழங்கப்பட வேண்டியது |
|---|---|---|---|---|
| 1 | அஞ்சூர் | 925384 | 253100 | 672284 |
| 2 | இச்சிப்பாலையம் | 1261380 | 102000 | 1159380 |
| | மொத்தம் | 2186764 | 355100 | 1831664 |



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY

2.5% கூடுதல் வைப்புத்தொகை

| வ. எண் | ஊராட்சியின் பெயர் | வழங்கப்பட வேண்டிய 2.5% கூடுதல் வைப்புத்தொகை | நாளது வரை வழங்கப்பட்ட 2.5% கூடுதல் வைப்புத்தொகை | மீதம் வழங்கப்பட வேண்டியது |
|---|---|---|---|---|
| 1 | அஞ்சூர் | 249308 | 245625 | 3683 |
| 2 | இச்சிப்பாளையம் | 370448 | 254254 | 116194 |
| | மொத்தம் | 619756 | 499879 | 119877 |

மேலும், வழக்கு நடைபெற்று வரும் நிலையிலும் தொடர்ந்து பொதுமக்கள் பங்களிப்புத் தொகை வசூல் செய்யப்பட்டு கீழ்காணும் விபரப்படி தொகை விடுவிக்கப்பட்டுள்ளது.

10% பொதுமக்களின் பங்களிப்புத்தொகை

| வ. எண் | ஊராட்சியின் பெயர் | வழங்கப்பட வேண்டிய 10% பொதுமக்களின் பங்களிப்புத் தொகை | 14.10.2025 அன்று வழங்கப்பட்ட 10% பொதுமக்களின் பங்களிப்புத் தொகை | 02.02.2026 அன்று வழங்கப்பட்டது | 19.02.2026 அன்று வழங்கப்பட்டது | மீதம் வழங்கப்பட வேண்டியது |
|---|---|---|---|---|---|---|
| 1 | அஞ்சூர் | 925384 | 253100 | 60800 | 56000 | 555484 |
| 2 | இச்சிப்பாளையம் | 1261380 | 102000 | 20400 | 30500 | 1108480 |
| | மொத்தம் | 2186764 | 355100 | 81200 | 86500 | 1663964 |

மேலும், அஞ்சூர் மற்றும் இச்சிப்பாளையம் கிராம ஊராட்சிகளில் வேறு எந்த நிதி ஆதாரமும் இல்லை. சொந்த வருவாய் மிகக்குறைவாக உள்ளதால் மாநில நிதிக்குழு மான்ய நிதியினை பெற்றே கிராம ஊராட்சிகளில் மேற்கொள்ளப்படும் அடிப்படை பணிகளான குடிநீர் பைப்லைன் மற்றும் தெருவிளக்குகள் பராமரிப்பு பணிகள், ஊராட்சி பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் மின்சாரம் மற்றும் குடிநீர் கட்டணம் செலுத்தப்பட்டு வருகிறது. இதனால் வேறு எந்த நிதியிலிருந்தும் தொகை விடுவிக்க இயலாத நிலை உள்ளது. எனவே, பொதுமக்களிடம் முழுமையாக வசூல் செய்தால் மட்டுமே தொகை விடுவிக்க இயலும்.

இந்நிலையில் பொதுமக்கள் பங்களிப்புத்தொகை வசூல் செய்திட ஊராட்சி செயலர்கள், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) ஆகியோர் நேரில் சென்று அணுகும் போது பொதுமக்கள் தங்களை தினந்தோறும் பங்குத்தொகை செலுத்தக் கோரி வசூல் செய்து வருகிறோம். பங்குத்தொகை வசூல் செய்வதன் அவசியத்தை எடுத்துக்கூறி கண்டிப்புடன் வசூல் செய்ய முற்படும்போது பொதுமக்கள் தங்களை மன உளைச்சலுக்கு ஆளாக்குவதாக ஊர் முழுவதும் புகார் தெரிவிக்கின்றனர்.



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY

மேலும், வசூல் செய்ய செல்லும் நேரங்களில் பெண்கள் மட்டுமே இருப்பதால் அவர்களிடம் தொகை கேட்டால் குடும்பத்தலைவரிடம் கேட்டு பெற்றுக்கொள்ளுங்கள் என கூறி காலம் தாழ்த்துகின்றனர். இதனால் தினசரி அதே வீடுகளுக்கு செல்ல வேண்டியுள்ளது. இச்சிப்பாளையம் ஊராட்சி பொதுமக்களிடம், பொதுமக்கள் பங்களிப்புதொகை செலுத்த நிர்பந்திக்கும் போது ஒருசாரர் குடிநீர் இணைப்பு வழங்கும்போது அப்பணியினை மேற்கொண்டவர்களுக்கு தொகை ரூ.500/- வழங்கியுள்ளதாக தெரிவித்து தற்போது பொதுமக்கள் பங்களிப்புத்தொகை வழங்க இயலாது என தெரிவிக்கின்றனர்.

மேலும், பொதுமக்களின் விருப்பமின்றி அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டதால் தங்களுக்கு வருமானம் வரும் நேர்வில் மட்டுமே பொதுமக்கள் பங்குத்தொகை வழங்க இயலும். தொகை வழங்க இயலாத நேர்வில் தங்களது குடிநீர் இணைப்பினை துண்டித்துக்கொள்ளுங்கள் என்று பொதுமக்கள் தங்களது கருத்துக்களை முன்வைக்கின்றனர்.

இருப்பினும், பொதுமக்களிடமிருந்து JJM பொதுமக்கள் பங்குத்தொகையினை வசூல் செய்திட தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு களப்பணியாளர்களுக்கு பணி பகிர்ந்தளிக்கப்பட்டு தொகை வசூல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது

எனவே, எங்களது களச்சூழ்நிலையினையும் கருத்தில் கொண்டு அஞ்சூர் மற்றும் இச்சிப்பாளையம் ஊராட்சி பொதுமக்களிடமிருந்து பொதுமக்கள் பங்குத்தொகை வசூல் செய்திட உரிய கால அவகாசம் வழங்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ),
கொடுமுடி வட்டாரம்.



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY

3. After the orders were passed by this Court recording the serious steps, that the Collector said would be undertaken, a further sum of Rs.86,500/- has been paid.

4. Since the report admits that the balance amount of Rs.16,63,964/- is admittedly due, as stated by the District Collector, Erode District, serious steps would be taken to recover the aforesaid balance amount and the payments would be made to the writ petitioner, within a period of four months from today(23.02.2026). This writ petition is disposed of. No costs.

**23-02-2026**

Index: Yes/No
Speaking/Non-speaking order
Neutral Citation: Yes/No

*Maya*

To

1. The District Collector
   Erode, Erode District -638 011.
2. The Project Director
   District Rural Development Agency,
   Collector Office Buildings,
   Erode -638011.
3. The Executive Engineer
   District Rural Development Agency,
   Erode -638011.
4. The Block Development Officer
   (Village Panchayat),
   Kodumudi -638151
   Erode District.



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



**V.LAKSHMINARAYANAN, J.**

*Maya*

**WP No. 505 of 2026**

**Dated : 23-02-2026**



https://www.mhc.tn.gov.in/judis